**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 22/2015** **நாள் 09.06.2026**

**பிவாசா.1, திருமதி.புஷ்பா**

**பிவா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் டிப்ளமோ படிப்பை படித்துள்ளேன். தாவா வழக்கில் சொல்லியுள்ள சொத்து விபரம் எனக்கு தெரியும். பத்திரகாளியம்மன் கோவிலை ஒட்டி மேற்கு பக்கம் ஒரு தென்வடலாக தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தென்வடல் தெருவானது வழக்கின் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வடக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். பிராது 1, 2 தபசில் சொத்துக்களுக்கு மேற்கு பக்கம் , 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் ஓரத்தில் வடக்கு நோக்கி அந்த தென்வடல் தெரு செல்கிறது என்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வேறு ஒரு தென்வடல் தெரு செல்கிறது என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்கு பக்கம் மற்றும் கிழக்கு பக்கம் செல்லும் அந்த தென்வடல் தெருக்கள் வடக்கு பக்கம் உள்ள கவிமணி தேசியம் விநாயகம் பிள்ளை தெருவுக்கு சென்றடைகிறது என்றால் சரிதான். நான் என் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள தென்வடல் தெருவழியாக வந்து தெற்குபக்கம் உள்ள முடங்கியார் சாலைக்கு வருகிறேன் என்றால் சரிதான்.பிராது 1வது தபசில் சொத்தான பத்திரகாளியம்மன் கோவிலானது இராஜபாளையம் வானியர் வணிக வைசிய சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரிதான். அந்த சமூகத்தை சார்ந்தவர்கள் தான் அந்த கோவிலை நிர்வாகம் பார்த்து வருகிறார்கள் என்றால் சரிதான்.பிராது 2வது அயிட்ட சொத்துக்கு வடக்கு பக்கம் உள்ள வீட்டில் என்னுடைய திருமணத்திற்கு பின்பு 20 ஆண்டு காலமாக நான் குடியிருந்து வருகிறேன். பத்திரகாளியம்மன் கோவிலில் என்ன திருவிழாக்கள் நடைபெறுகிறது என்ற விபரம் எனக்கு தெரியும். அந்த கோவிலில் திருவிழா மற்றும் நிகழ்ச்சிகள் அந்த கோவிலுக்கு முன்பாக உள்ள பிராது 2வது அயிட்ட சொத்தான மைதானத்தில் தான் நடைபெறும் என்றால் சரிதான். அந்த மைதானத்தில் தற்போதும் 2 கல்செக்குகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு கல்செக்குகள் மூலமாக வானியர் வணிக வைசிய சமுதாயத்தினர் எண்ணெய் ஆட்டி தொழில் செய்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எண்ணெய் ஆட்டி வியாபாரத்திற்காக செய்யவில்லை. கோவில் உபயோகத்திற்காக எண்ணெய் ஆட்டியுள்ளார்கள் என்று தெரியும். பிராது 2வது தபசில் சொத்தில் இன்று வரையிலும் ஒரு விளக்கு துாண் உள்ளது. கோவிலுக்கு முன்னாடி உள்ள அந்த காலிமனை மைதானம் போன்று அகன்றது என்றால் சரிதான். அந்த காலிமனைக்கு வாதிகள் இன்று வரையிலும் தீர்வையை செலுத்தி வருகின்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் என் வீட்டில் கிழமேல் , தென்வடல் அளவு பற்றி சொல்லியுள்ளதா என்று எனக்கு தெரியாது.பிவாசாஆ.1 ஆவணத்தில் நாங்கள் குடியிருந்து வரும் வீடு எத்தனையாவது தபசிலாக சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டிற்கும் மற்ற பிரதிவாதிகளின் வீட்டிற்கும் தெற்கு பக்கம் ஓரத்தில் கிழமேலாக ஒரு வாறுகால் செல்கிறது என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கு பக்கம் கிழமேலாக தெரு உள்ளது. அந்த தெரு வழியாக என் வீட்டிற்கு சென்று வர முடியும். என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மற்ற வீட்டுக்காரர்களும் என் வீட்டிற்கு வடக்கு

பக்கம் கிழமேல் தெருவழியாக அவரவர்கள் வீட்டிற்கு சென்று வர முடியும். நான் கிழமேலாக 3 மீட்டரும், தென்வடலாக 4 மீட்டரும் பிராது 2வது தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றும் சொன்னால் அது சரியல்ல. பிவாசாஆ.1 மற்றும் 2 ஆவணப்படிக்கு என் வீட்டிற்கு உரிய அளவுகள் பற்றி எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிராது 2வது அயிட்ட சொத்தில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மறைக்கும் நோக்கத்தோடு தான் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எங்கள் வீட்டின் அளவுகள் பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. பிராது 2வது அயிட்ட சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்று நாங்கள் வழக்கிற்காக வேண்டி தவறாக சொல்கிறோம் என்றால் அது சரியல்ல. பிராது 2வது அயிட்ட செத்தானதை நாங்கள் எந்த காலத்திலும் தெருவாக பயன்படுத்தியது இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை அனுமதியுடன்.</u>**

என் வீட்டின் தலைவாசல் தென்பக்கம் பார்த்து தான் உள்ளது.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

2013ம் ஆண்டு மார்ச் மாதத்தில் பிராது 2வது தபசில் சொத்தை நாங்கள் ஆக்கிரமித்து வீடு கட்டும்போது தலைவாசலை தெற்கு பக்கமாக வைத்து கட்டியுள்ளோம் என்றால் ஆக்கிரமித்து கட்டவில்லை. பிராது 2வது தபசில் சொத்தில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதை இடித்து அப்புறப்படுத்திக் கொடுக்க வேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.